# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்



| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | திணைமரபு | 26 |
| 7. | கோமதி | சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூரியா.ர | விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபுபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள்

மா.ஜெ.சசிக்குமார்,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

ஆரம்பம் முதலாக நமது மண்ணில் பிறந்து வளர்ந்த ஆயக் கலைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு. இன்றைய சூழலில் இக்கலைகள் இன்னும் அதிகமாகப் பெருகியுள்ளன. எத்தனையோ கலைகள் எண்ணற்று இருந்தாலும் மனித இனம் முதன் முதலில் கண்டுபிடித்ததும், கடைபிடித்ததும் தற்காப்புகலைதான் என்றே சொல்லவேண்டும். மனிதன் தன்னுடைய ஆதாரங்களான உணவு, உறைவிடம் ஆகியவற்றைத் தொடர்ந்து பெறவும், பெற்றவற்றைத் தற்காத்துக் கொள்ளவும் இக்கலையே தேவையாக இருந்தது.

**முதற்கலை**

சிலம்பக் கலைதான். ஆதிமனிதன் கண்டுபிடித்த முதற்கலை எனலாம். எனவே, அதனுடைய பழமையை ஆராய்ச்சி செய்வோம் இதற்கான விடை வரலாற்று ஆதாரங்களிலும், புராண இதிகாசக் கருத்துக்களிலும் கிடைக்கின்றது.

**லெமூரியா – குமரிகண்டம்**

கடல் கொண்ட தென்னாடு, குமரிகண்டம், லெமூரியா என்ற பெயர்களில் அழைக்கப்பட்ட நிலப்பகுதியையும் தமிழர்கள் ஆதியில் வாழ்ந்த நிலப்பகுதி என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். கி.மு.10527–ல் (அதாவது இன்றைய கி.பி.2018 – கணக்குப்படி 12545 ஆண்டுகட்கு முன்பே) குமரிகண்டத்தில், 'காய்சின வழுதி' என்னும் மன்னன் முதல் தமிழ்ச்சங்கத்தை நிறுவியதாக ஆராய்ச்சியாளர்கள் உறுதிபடச் சொல்லுகின்றனர். ஒரு அரசாட்சி என்பது படைகள், படைக்கலன்கள் ஆகியவற்றை உடையதாகவே இருக்கவேண்டும். படைப்பயிற்சிக்கு அடிப்படை சிலம்பப் பயிற்சியே ஆகும். அவ்வகையில் பார்க்கும் போது 12500 ஆண்டுகட்கு முன்பே சிலம்பப் பயிலப்பட்டது என்பதை அறியலாம்.

பின்னர் கி.மு. 10468-ல் மிகப்பெரிய கடல்கோள் (ஆழிப் பேவை) ஏற்பட்டு லெமூரியாக்கண்டம் மூழ்க ஆரம்பித்தது அச்சமயத்தில் தமிழர்கள் வடக்கும் தெற்குமாக இடம் பெயரத் துவங்கினர். இவ்வாறு

சென்றவர்கள் இலங்கை, இப்போதைய தமிழகம் என்று வந்ததோடு, மற்றவர்கள ஆஸ்திரேலியாவிலும் வசிக்கலாயினர்.

மேலும் உலக மக்கள் எவரிடமும் புழகத்தில் இல்லாத ஒரு அபூர்வ ஆயுதம் தமிழ் மக்கள் மற்றும் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களிடம் மட்டுமே உண்டு அதுதான் 'வளரி' எனப்படும் 'பூமராங்' புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இவ்வளரி. உதகமண்டலம் மலைவாழ் மக்களிடம் இப்போதும் பயன்பாட்டில் இருக்கின்றது.

**புராண ஆதாரம்**

சீதையைத்தேடி இராமர் வருகையில், அவரை பொதிகைமலைக் குறுமுனி அகத்தியரைச் சென்று வணங்கிச் செல்லும்படி சுக்ரீவன் கேட்டுக்கொண்டதாக இராமாயணத்தில் சொல்லப்படுகின்றது. இராமாயண காலத்தில் பொதிகைமலையில் அகத்தியர் வாழ்திருக்கக்கூடும் என்பது இதன் மூலம் அறியப்படுகின்றது. அத்தகைய அகத்தியச் சித்தர் எழுதிய "கம்பு சூத்திரம்" எனும் காவியத்தில் தான் முதலில் சிலம்பம் கற்றதாகவும், அதன் பின்பே தவவாழ்வில் ஈடுபட்டதாகவும் அவரே குறிப்பிடுகின்றார். இவ்வாறு சரித்திர, புராண ஆதாரங்கள் அனைத்துமே நமக்கு சிலம்பத்தின் பழைமையை உணர்த்துகின்றன.

"இன்பத்துடன் சிலம்பிருக்கும் வகையைச் சொல்லி
கருவென்ற சிலம்பருக்கும் வகையைச் சொல்லி
கருவென்ற பட்சியுடவீச்சுங் காட்டிக்
கால்பிலமும், புஜப்பிலமும் கலந்து சொல்லி
திருவென்ற மந்திரத்தின் தீர்க்க சொல்லி"

- கம்பு சூத்திரம்

**சங்ககால ஆதாரங்கள்:**

கி.மு. 200-ல் வாழ்ந்த சங்ககாலத்து ஔவையாரின் பாடலில் ஆயுதங்கள் குறித்த குறிப்புகளைக் காண்போம்.

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களமபடக் கலந்த கழல்தொடி தடக்கை.."

(புறநானூறு 91)

தொண்டை மன்னனிடம் அதியமானுக்காகத் தூது சென்ற ஔவையார் அவ்வரசனின் ஆயுதச் சாலையிலுள்ள ஆயுதங்களைக் கண்டு

"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்கழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடு நுதிசிதைந்து
கொல்துறைக் குற்றில் மாதோ என்றும்

அண்ணல் எம்கோமான் வைந்நுதிவேலே.."
(புறநானூறு 95)

தொண்டைமானே! உனது ஆயுதச் சாலையில் ஆயுதங்கள் மயில்தோலையும், பூமாலையும் சூடி, நெய்பூசப்பட்டு இருக்கின்றன. ஆனோல் அதியமானின் வேல்களோ பகைவர்களைக் குத்தியதால் முனை, மழுங்கி கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன என்று பாடுகின்றார். (வேலுக்கு மூலம் சிலம்பக் கோல் ஆகும்)

தொல்காப்பியத்தில் ஆதாரம்

"வில்லும் வேலும் கண்ணியும் தாரும் மாலையும்
தேரும் மாவும் மன்பெறு மரபின் ஏனோர்க்கு உரிய"
தொல்.மரபியல் 628

இங்கு வேல் எனப்பட்ட ஆயுதத்தின் ஆதார ஆயுதம் சிலம்பக் கழியே ஆகும்.

இதேபோன்று பிற்காலத்தில் எழுதப்பட்ட திருவிளையாடல் புராணத்தில் ஆயுதப்பயிற்சி (சிலம்பக்கூடம்) சாலைகள் ஆங்காங்கே அமைத்துப் பயிற்றுவித்தல் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

"மூத்தவன் ஒருவன் வைதி முனைய வாள்பயிற்றி வாழ்வான்"
திருவிளையாடற் புராணம் பாடல் 1576

திருக்குறள் ஆதாரம்

"வேலோடு நின்றான் இருஎன் றதுபோலத்
கோலோடு நின்றான் இரவு"
"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்"
"வாடுளாடு என்வன் கண்ணார் அல்லார்க்கு
நூலொடுத்து என்நுண்ணவை அஞ்சுபவர்க்கு"

என்றதைப் போன்ற குறள்களில் வேலும், வாளும் பற்றி வள்ளவர் குறிப்பிட்டிருக்கிறார். சிலம்பத்தில் நெடுங்கம்பில் ஆயுதம் தாங்கிய அமைப்பே வேலாகும். அதேபோன்று அரைக்கம்பு அமைப்பே வாளாகும். இதன் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன்பே தமிழர்கள் சிலம்பாடியுள்ளது தெளிவாகிறது.

தேம்பாவணி ஆதாரம்

இக்காப்பியத்தில் சிலம்பம் பற்றிய குறிப்பு உள்ளது.

"சுருதிநூ லுயிர் பெற்றன்ன ஆடர்த்தவத் துரையின் மிக்கோய்
கருதிநூ லுரைப்ப கேட்கக் களிப்புறின் சிலம்ப வீரத்
திருதிநூன் முடவர் கேட்க தென்னவன் களித்த தல்லால்
பொருதிநூ லெழக்கத் தஞ்வப் பொழுதில் ஆற்றா தென்றான்"

இவை தவிர என்னென்ன வகை ஆயுதங்கள் அக்காலத்தில் இருந்தன என்றும், எத்தனை வகைப் போர் முறைகள் இருந்தன என்றும் சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. அவை,

**ஆயுத வகை**

அடார், அம்பறாத்தூணி, அம்பு, அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிசிப்படை, கலப்பை, கழிப்பிணிப்பலகை, கோடாலி, சக்கரம், துடுப்பு, படைவாழ், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேல், வேலுறை, வளரி ஆகியன அறியப்படுகின்றன.

**யுத்தவகை**

அறப்போர், கன்னிப்போர், குதிரைப்போர், தேர்போர், நீர்ப்போர், மற்போர், யானைப்போர் ஆகியனவும் அறியப்படுகின்றன. இவைகளைப் பற்றிய குறிப்புகள், பாடல்கள் ஆகியன சங்க இலக்கியங்களில் உள்ளன. இவற்றின் மூலம் சிலம்ப வரலாறு நமக்குத் தெளிவாக விளங்கும்.

**சிலம்பம் பற்றிய நூற்கள்**

சங்க காலத்திற்குப் பிறகு சிலம்பம் பற்றிய காவியங்கள் சில எழுத்து வடிவம் பெற்றன. அவை,

1. அகத்தியர் கம்பு சூத்திரம்
2. வீமன் குருத்தடி சிலம்பம்
3. நடசாரி போன்றவையாகும்.

இவற்றில் சிலம்பம் விளையாடுவது எப்படி என்ற பயிற்சி விவரங்கள் உள்ளன.

**கருத்துரை**

கற்கோயில் கட்டபட்ட சிலைவடிவில் உள்ள போர்ச் சிற்பங்கள் ஆதாரமாக் கிடைக்கின்றன. மேலும், அரசர்கள் எழுதிவைத்த செப்புப்பட்டயங்களும் ஒரு சிறந்த ஆதாரங்களாக உள்ளன.

இவ்வாறு 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் சிலம்பக்கூடம் அமைத்து சிலம்பப் பயிற்சியையும் மற்றும் பல ஆயுதப் பயிற்சியும் மேற்கொண்டது தெளிவாகிறது. இத்தகைய பாரம்பரியமிக்க பெருமைமிக்க சிலம்பக்கலையைத் தொடர்ந்து பயில்வது, உலகெங்கு பரப்புவது நமக்குக் கடமையாகும். அதற்கான முழு உரிமையும் நமக்கு உள்ளது. அந்த உரிமையைப் பயன்படுத்துவோம் கடமையை முழுமையாகச் செய்வோம்.

உடல், மனநலம் பெறுவோம். மற்றவர்களும் நலம் பெற உதவுவோம்.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்